ஈமானின் அடிப்படை அம்சங்கள்

ஒரு உண்மையான முஸ்லிமுடைய கொள்கை மிகவும் முதிர்ந்ததாகவும் உறுதியானதாகவும் இருக்கும். அஃகீதா என்பது உண்மையிலேயே அடிப் படையில் இயக்கும் பண்பாகும், இதன் காரணமாகவே, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும் இதன்தாக்கத்தினைப்பெறுகின்றன. இந்த அஃகீதா வின் ஆற்றல்தான் மனிதனுக்குத் தூண்டுதலாகவும் செயல்படும் வகையில் தொடர்ந்து இயக்கிக்கொண்டிருக்கின்றது. இந்த உண்மையான அஃகீதா வின் போதனைகள் மற்றும் விளக்கங்களை அளிப்பதற்காகவே அல்லாஹ் தஆலா நபிமார்கள், தூதர்கள், வேதங்கள் மற்றும் வஹீயினைத் தொடரச் செய்தான். அஃகீதாவைப் பொருத்தவரையில் மனிதர்களில் இரண்டு பிரி வினர்களாக உள்ளனர், ஒரு பிரிவினர் சீரான முறையான அஃகீதாவைக் கடைபிடித்து இவ்வுலகில் நிம்மதியும் மனநிறைவுமுடைய வாழ்க்கை யினையும் மறுமையில் நிலையான அல்லாஹ்வின் அருட்கொடைகளை யும் பெற்று சுகமான வாழ்க்கைக்கான தகுதியினைப் பெறுகின்றனர். மற் றொரு பிரிவினர் தவறான அஃகீதாவை மேற்கொண்டு இவ்வுலகிலும் தோல்வியையும் அவப்பேறையும் பெற்று மறுமையிலும் அல்லாஹ்விடம் தண்டனை மற்றும் வேதனைக்குத் தம்மை ஆளாக்கிக்கொள்கின்றனர். இறைத்தூதர் முஹம்மத் முஸ்தஃபா ﷺ அவர்கள் வாயிலாக மட்டுமே நாம் அஃகீதாவின் சரியான பொருள் மற்றும் அதன் விளக்கங்களைப்பெற முடியும். இறைத்தூதர் ﷺ அவர்கள்தான் மக்களுக்கு அஃகீதாவைப்பற்றிய அனைத்து அம்சங்களையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள், அவையாவன: அல்லாஹ்வின்மீது ஈமான் கொள்வது, அல்லாஹ்வுடைய மலக்குமார்கள் மீதான ஈமான், அல்லாஹ் அருளிய வேதங்களின்மீது ஈமான், அல்லாஹ் வின் திருத்தூதர்கள்மீதான ஈமான், மறுமை நாளின்மீது ஈமான், அல் லாஹ் நிர்ணயித்த விதிகளின்மீது ஈமான் ஆகியன. ஈமானின் இந்த அடிப் படை அம்சங்களின்மீது யார் தம்மை உறுதியாக நிலைநிறுத்திக்கொள் வாரோ, அதனுடைய உண்மைகளையெல்லாம் தம் மனதில் பதியவைத்து, தம் வாழ்நாள் முழுவதும் தன்னுடைய ஈமானின் அடிப்படைத் தேவை களுக்கேற்ப வாழ்க்கையை மேற்கொண்டு, தன்னுடைய ஈமான் சீரானதாக வும் தூய்மையானதாகவும் இருக்கும் வகையில் அதனைப் பாதுகாத்துக் கொள்வாரே அவர் இணைவைப்பின் பேரழிவிலிருந்து தம்மைப் பாது காத்துக்கொண்டார். இவர் இவ்வுலகத்திலும் வெற்றியும் மகிழ்ச்சியும் காண்பார் மறுமையிலும் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கான தகுதி யைப்பெறுவான். எந்நேரமும் சீரான அஃகீதாவைக் கடைபிடிப்பது எவ் வளவு சிறந்தது என்பதைப்பற்றி இந்த நிகழ்வில் காணமுடிகிறது: கடந்த காலத்தில் ஒரு கொடுங்கோல் அரசன் இருந்தான், அவன் எந்த அளவிற்குக் கர்வமும் பெருமையும் கொண்டிருந்தான் என்றால் அவன் தன்னையே கடவுள் எனவும் கூறிக்கொண்டான். அவனுடைய அவையில் ஒரு முதிர்ந்த

www.uzarfalahi.com

மந்திரவாதியும் இருந்தான். ஒரு நாள் அவன் அரசனிடம் கூறினான், மாண்புமிகு அரசரே, நான் மிகவும் கிழவனாக ஆகிவிட்டேன், இப்போது என்னுடைய ஆயுளின் அகல்விளக்கு அணையத்துவங்கிவிட்டது. இந்த மந்திரத் தந்திரக்கலை உங்களுடைய அரசவையில் தொடரவேண்டும் என நான் நினைக்கிறேன், ஆகவே, அனைத்துத் தந்திரங்களையும் கற்றுக்கொடுக்கும் வகையில் எனக்குக் கூர்மதியான ஒரு இளைஞனை அடையாளம் காட்டுங்கள் என்று கூறினான். இந்த ஆலோசனையை அரசன் மிகவும் விரும்பினான், ஒரு அறிவுத் திறனுள்ள கூர்மதியான இளைஞனை மந்திரவாதியிடம் ஒப்படைத்தான். இந்த மந்திரவாதியின் வீட்டிற்குச் செல்லும் வழியில் ஒரு மாதாகோயில் இருந்தது, அங்கே ஒரு வயதான மடத்துறவி வாழ்ந்துவந்தான். ஒரு நாள் இந்த வாலிபன் அந்த வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, மடத்தினுள் சென்று துறவியுடன் அமர்ந்து கொண்டான், அவனுடைய பேச்சுக்களைக் கேட்டான், அவையெல்லாம் இவனுக்கு மிகவும் பிடித்தன. இந்த வாலிபன் தினமும் அங்கே சென்று அமர்வதை வழக்கமாக ஆக்கிக்கொண்டான். ஒரு புறம் மந்திரவாதி அவனுக்கு மந்திரத்தந்திரங்களைக் கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்தான், மற்றொரு புறம் மடத்துறவி இறைவனின் ஏகத்துவம், விசுவாசம் மற்றும் பல்வேறு போதனைகளைச் செய்துகொண்டிருந்தான். நன்மையானவை தீயவை ஆகியவற்றைப்பற்றிய குழப்பம் அவன் மனதில் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் அந்த ஊரில் ஒரு வனவிலங்கு நுழைந்துவிட்டது, மக்கள் பீதியடைந்து தத்தம் வீடுகளில் சென்று தாளிட்டுக்கொண்டனர். வாலிபனுடைய மனதில் ஒருவிஷயம் பட்டது, மடத்துறவி உண்மையானவனா அல்லது மந்திரவாதியா என்பதைக் கண்டறிய இது ஒரு சிறந்த வாய்ப்பு என்று கருதினான். அவன் ஒரு கல்லைக் கையில் எடுத்து அல்லாஹ்விடம் இந்த மடத்துறவி உண்மையானவனாக இருந்தால் இந்தக் கல்லால் அந்த கொடிய விலங்கைக்கொண்றுவிடு என்று துஆ செய்தவனாக அந்தக் கல்லை அந்த விலங்கின்மீது எறிந்தான். அல்லாஹ்வின் செயல் அந்த விலங்கு இறந்துவிட்டது. அந்தச் சிறுவன் மடத்துறவியிடம் வந்து நடந்த விஷயத்தை எடுத்துக்கூறினான். மடத்துறவி மகிழ்ச்சியடைந்தான், அந்தச் சிறுவனின் மதிப்பும் கண்ணியமும் அவன் பார்வையில் அதிகரித்து விட்டது. மிகவும் மரியாதையுடன் நடந்துகொண்டு அந்த மடத்துறவி கூறினான்: என் அருமை மகனே, நீ என்னைவிடச் சிறந்தவனாக உள்ளாய், அல்லாஹ் உன் மூலமாக பெரும்பெரும் அதிசயங்களை வெளிப்படுத்துவான், உன்னுடைய விசுவாசத்தினை சோதனையும் செய்வான். மடத்துறவி அவனுக்கு உபதேசம் செய்தவனாகக் கூறினான், நீ யாருக்கு முன்பாகவும் நான் உனக்கு ஏகத்துவம் மற்றும் விசுவாசத்தின் போதனைகளைக் கூறியதாகக் கூறிவிடாதே. அவ்வாறு தெரிந்துவிட்டால் அரசன் கடுமையான தண்டனையை அளிப்பான் என்று கூறினான். பின்பு அந்தச் சிறுவன் இறைவன் அருளால் நோய்வாய்ப்படும் மக்களை குணமாக்கத்துவங்கினான். குஷ்டர்

www.uzairfalahi.com

கள் மீது தன்னுடைய கையைத் தடவினால் அவர்களுடைய குஷ்டநோய் நீங்கிவிடும். பிறவிக் குருடர்களும் இவன் மூலம் பார்வையடைந்துவிடு வார்கள். அரசவையில் இருந்த ஒருவன் குருடனாயிருந்தான், அவன் இந்தச் சிறுவனுடைய அற்புத விஷயத்தைக் கேள்விபட்டு பெருமளவிலான விலை மதிக்கத்தக்க அன்பளிப்புகளும் வெகுமதிகளும் கொண்டுவந்து கூறினான் நீ என்னுடைய கண் பார்வையை வரவழைத்துவிட்டால் இந்த வெகுமதி களும் செல்வம் அனைத்தும் உனக்கே கொடுத்துவிடுகிறேன். சிறுவன் கூறி னான், நான் குணமாக்குவதில்லை, அல்லாஹ்தான் குணமாக்குகிறான், நீங்கள் அவன் மீது விசுவாசம் கொண்டு ஈமான் கொள்ளுங்கள், நானும் உங்களுக்காக துஆ செய்கிறேன், நிச்சயம் அல்லாஹ் குணமாக்குவான். அந்த அரசவைப் பிரமுகர் அல்லாஹ்வின்மீது ஈமான் கொள்வதாக ஏற்றுக்கொண் டார், அச்சிறுவன் துஆ செய்தான் அவனும் குணமடைந்துவிட்டான். மறு நாள் அரசவைப் பிரமுகர் அரசனுக்கு முன் வந்தபோது அரசன் மிக்க ஆச்சரி யப்பட்டான், கேட்டான், உம் கண்களில் பார்வை எவ்வாறு திரும்பியது? அரசவைப் பிரமுகர் தான் ஈமான் கொள்வதாக முன்பே ஏற்றுக்கொண்டி ருந்த காரணத்தினால் பதில் கூறினான்: என் இறைவன் என்னைக் கண் பார்வையுடையவனாக ஆக்கிவிட்டான். அரசன் கூறினான், என்னைத்தவிர எவனும் உன்னுடைய இறைவனாக உள்ளானா? அந்த அரசவைப் பிரமுகர் முழு நிம்மதியுடனும் பொறுமையுடனும் கூறினான் என்னுடைய இரட்ச கனும் உன்னுடைய இரட்சகனும் அல்லாஹ் ஒருவன்தான், இதனைக் கேட்ட அரசன் மிகவும் கோபமடைந்தான், அவனுடைய ஆணைக்கேற்ப அந்த அரசவைப் பிரமுகர் கைதுசெய்யப்பட்டார், மிகவும் துன்புறுத்தப்பட் டார், இறுதியில் அச்சிறுவனைப்பற்றிய தகவலையும் அளித்துவிட்டார். அச்சிறுவனைக் கைது செய்ய அரசன் படைகளை அனுப்பினான், அச்சிறுவ னும் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டு தண்டனை அளிக்கப்பட் டான். இறுதியாக அவன் அந்த மடத்துறவியைப்பற்றிய தகவலையும் கொடுத்துவிட்டான், மடத்துறவி அரசவைக்கு அழைக்கப்பட்டான். அரசன் கூறினான் நீ உன் மதத்தைவிட்டுத் திரும்பிவிடு, ஆனால், மடத்துறவி மறுத்துவிட்டான். அரசன் அவனை வாளால் அறுத்து இரு துண்டுகளாக வெட்டச்செய்தான், அரசவைப் பிரமுகரையும் மதத்தைவிட்டுத் திரும்பி விடுமாறு பணித்தான், அவரும் மறுத்துவிட்டார், அவரையும் அரசனின் ஆணையால் வாளால் வெட்டிவிட்டார்கள். இறுதியில், சிறுவனும் அழைக் கப்பட்டு அவனையும் மார்க்கத்தைக் கைவிடுமாறு கூறப்பட்டது, அச்சிறு வனும் மறுத்துவிட்டான். அரசன் கோபத்தால் பொங்கியெழுந்து உணர்ச்சி வசப்பட்டவனாகத் தன்னுடைய படைவீரர்களுக்கு ஆணயையிட்டான், இவனை அழைத்துச்செல்லுங்கள், மலை உச்சியை அடைந்து அவனிடம் கூறுங்கள் உன்னுடைய மார்க்கத்தை விட்டுவிடு, அவன் ஆம் என்று கூறி னால் திரும்பி அழைத்துவாருங்கள், மறுத்தால் அவனை அங்கிருந்து தள்ளி விடுங்கள். அவ்வாறே, படைவீரர்கள் அவனை மலை உச்சிக்குக் கொண்டு

www.uzairtalahi.com

சென்றனர். அச்சிறுவன் அல்லாஹ்விடம் துஆ கேட்டான், இறைவா, இவர்கள் செய்ய நினைக்கும் விஷயத்தில் அவர்களை வெற்றியடையச் செய்துவிடாதே, நீ எனக்கு உதவி செய்வாயாக. சிறுவன் துஆ கேட்கும் போதே அந்த மலை அதிரத்துவங்கியது, அனைத்து படை வீரர்களும் உருண்டு விழுந்தனர். சிறுவன் பத்திரமாக மலைக்குக் கீழே இறங்கினான், பின்பு அரசவையில் அரசனுக்கு முன்னால் வந்தான். அரசன் கேட்டான்: என்னுடைய படைவீரர்கள் எங்கே சென்றார்கள்? சிறுவன் கூறினான், அவர்களுக்கு எதிராக அல்லாஹ் எனக்கு உதவிசெய்தான். சிறுவனுடைய பேச்சைக்கேட்டு அரசன் கோபமடைந்தான், மற்ற படைவீரர்களை அழைத்துக் கூறினான் இவனை அழைத்துச்செல்லுங்கள், இவனைப் படகில் உட்கார வைத்து நடுக்கடலில் சென்று கேளுங்கள், இன்னும் அவன் தன்னுடைய மார்க்கத்தில் நிலைத்திருக்கின்றானா என்று, ஆம் என்று கூறினால், படகைக் கவிழ்த்துவிடுங்கள். அரசனின் ஆணைப்படி படைவீரர்கள் அவ்வாறே செய்தனர். நடுக்கடலில் சென்றடைந்து அச்சிறுவன் அதே வகையில் துஆ செய்தான், அல்லாஹ் அவனுடைய துஆவை ஏற்றுக்கொண்டான். படகு கவிழந்துவிட்டது, அனைத்துப் படைவீரர்களும் முழ்கிவிட்டனர், அல்லாஹ்வின் கட்டளையால் சிறுவன் தப்பித்துக்கொண்டான். இந்த நிகழ்விற்குப்பிறகு அச்சிறுவன் நினைத்தான், இந்த உலகில் இறுதியாக நான் மட்டுமே ஈமான் கொண்டவனாக இருந்துகொண்டிருக்கிறேன். மடத்துறவியும் அரசவைப் பிரமுகரும் ஏற்கனவே ஷஹீதாகிவிட்டனர், என்னிடம் ஈமான் பற்றிய அமானிதம் உள்ளது, அதனை மற்றவர்களிடம் கொண்டு சேர்ப்பது என்னுடைய கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒரு அணுகுமுறை அவன் மனதில் பட்டது. அவன் அந்த அரசனிடம் சென்று கூறினான், அரசரே, நீங்கள் என்னை இவ்விதமாகக் கொன்றுவிட முடியாது. நீங்கள் என்னைக் கொலை செய்துதான் ஆகவேண்டும் என்றால் நான் உங்களுக்கு ஒரு வழியைக் காட்டுகிறேன். சிறுவனுடைய பேச்சைக் கேட்டு அரசன் ஆச்சரியத்துடன் பார்த்தான், அவனே மரணத்தின் வாயில் புகுந்துவிட வழியும் காட்டுகிறானே. அரசன் கேட்டான், அதற்கு என்ன வழி? சிறுவன் கூறினான், அதற்கான வழி என்னவெனில், ஒரு பெரிய திடலில் அனைத்து மக்களையும் ஒன்று கூட்டுங்கள், பின்பு என்னை ஒரு சிலுவையில் எவ்வாறு கட்டவேண்டும் என்றால் என்னை அனைவரும் பார்க்க வேண்டும். அதன்பின் என்னுடைய இந்த அம்புகளை எடுத்துக்கொள்ளுங்கள், அதனை வில்லில் பொருத்தி உரத்தக் குரலில் கூறுங்கள்: இந்தச் சிறுவனின் இரட்சகனான அல்லாஹ்வின் திருப்பெயரால் என்று கூறியவாறு அம்பைச் செலுத்துங்கள். இவ்வாறு நீங்கள் செய்தீர்களானால் நான் கொல்லப்படலாம். அரசன் எவ்வகையிலும் இந்தச் சிறுவனைத் தன்னுடைய வழியிலிருந்து அகற்றவேண்டும் என்று கங்கணம் கட்டியிருந்தான், அவன் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதலளித்தான். மிகப்பெரிய ஒரு திடலில் மக்கள் ஒன்று கூட்டப்பட்டனர், சிறுவன் சிலுவையில் கட்டப்பட்டான், திட்டமிடப்

பட்ட வகையிலேயே அம்பு செலுத்தப்பட்டது, அந்த அம்பு சிறுவனின் உடலில் தைத்து அவன் இறந்துவிட்டான். அந்தச் இறந்துவிட்டதைக்கண்ட மக்கள் அனைவரும் உரத்தக் குரலில் கூறினார்கள். நாங்கள் இந்தச் சிறுவனின் இரட்சகன்மீது விசுவாசம் கொள்கிறோம், நாங்கள் இந்தச் சிறுவனின் இரட்சகன்மீது விசுவாசம் கொள்கிறோம், அரசன் எதனைக்கொண்டு பயந்தானோ அதுவே நடந்துவிட்டது (முஸ்லிம்).

அல்லாஹ்வின்மீது ஈமான் கொள்ளுதல்

இது ஈமானுடைய முதல் அடிப்படையாகும். ஹதீத்ஸ் ஜிப்ரயீல் எனப்படும் நபிமொழியில் இதற்கான விளக்கம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அ) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் ஈமானைப் பற்றிக் கேட்கின்றார்கள், அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் பதிலளிக்கிறார்கள்:

أَنْ تُؤْمِنَ بِاللهِ، وَمَلَائِكَتِهِ، وَكُتُبِهِ، وَرُسُلِهِ، وَالْيَوْمِ الْآخِرِ، وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ

பொருள்: *அது நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய மலக்குமார்கள் மீதும், அவனுடைய வேதங்களின்மீதும், அவனுடைய தூதர்கள்மீதும், மறுமை நாள்மீதும், நன்மையும் தீமையும் அல்லாஹ்வின் விதியின்படியே என்றும் ஈமான் கொள்வதாகும் (முஸ்லிம்).*

அல்லாஹ்வின்மீது நம்பிக்கை கொள்வதுதான் இஸ்லாத்தின் உயிர்நாடியும் இஸ்லாமியக் கோட்பாடுகளின் (அஃகிதா) அடிப்படையுமாகும். அல்லாஹ்வின்மீது ஈமான் கொள்வது என்பதன் பொருள் ஒரு முஸ்லிம் அனைத்துப் படைப்புகளின் இரட்சகன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே, அவனைத்தவிர வேறு நாயன் இல்லை என்று நம்புவதாகும். அவன் மட்டுமே அனைத்துப் படைப்புகளின் படைப்பாளன், அவனைத்தவிர வேறு படைப்பாளன் யாருமில்லை, அவன்தான் வாழ்வும் மரணமும் அளிப்பவன், இலாப நஷ்டம் அளிப்பவன் அல்லாஹ் மட்டுமே, அவன் தனித்தவன்,அவனே வணக்கத்திற்குரியவன். இத்துடன், அவன் அனைத்து நற்பண்புகளையும் கொண்டவன் என்றும் அனைத்துக் குறைகளிலிருந்தும் அப்பாற்பட்டவன் என்றும் விசுவாசம் கொள்வது மிகவும் இன்றியமையாத கொள்கைகளுள் ஒன்றாகும்.

* * *

www.uzairfalahi.com